1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே நான்கு தலைமைப் பொறியாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெருஞ்சாலைகள், பிற மாவட்டச் சாலைகள் இவைகளையெல்லாம் சேர்த்து கவனிக்க ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். தேசிய நெடுஞ்சாலைகளுக்காகவும், மத்திய சாலைகள் நிதித் திட்ட வேலைகளுக்காகவும் ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். பாம்பன் பாலத் திட்டத்திற்காக ஒரு தலைமைப் பொறியாளர் இருந்து கொண்டிருக்கிறார். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ஒரு தலைமைப் பொறியாளர் இருந்துகொண்டிருக்கிறார். இவர்களே இந்த வேலைகளையும் பார்த்துக்கொள்ள முடியுமென்பதால், இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கிராமச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து தலைமைப் பொறியாளர் நியமித்தால், அதற்கேற்ப அந்தப் பணிகள் சிறக்குமென்றுதான் சொன்னேன். கிராமச் சாலைகள் திட்டத்திற்காக இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள்தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதை நான்காக உயர்த்த அரசு முன்வருமா? இப்போது 10 மாவட்டங்களுக்கு 10 டிவிஷன்கள்தான் இருக்கின்றன. இன்னும் ஐந்து மாவட்டங்களுக்கு டிவிஷன்கள் அமைக்கப்படவில்லை. எனவே ஐந்து மாவட்டங்களுக்குப் புதிதாக டிவிஷன்கள் அமைப்பது குறித்தும், கண்காணிப்புப் பொறியாளர்களை நான்காக உயர்த்தவும் அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கெனவே, இதே மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய இன்னொரு கேள்விக்கு பதில் அளித்தபோது, கண்காணிப்புப் பொறியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகள் அதிகமாக இருக்கின்றன, அதைக் குறைக்க இன்னும் அதிகமான கண்காணிப்புப் பொறியாளர்களைப் போடும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன். ஆகவே கண்டிப்பாக அது பரிசீலிக்கப்படும்.

நகராட்சிப் பள்ளி மேற்பார்வையாளர்கட்கு மோட்டார் சைக்கிள் வாங்கக் கடன்.

*151 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடிதண்ணீர் திட்ட மேற்பார்வையாளர்கள், பொது மராமத்து மேற்பார்வையாளர்கள், ஆகியோருக்கு வழங்கப்படுவதைப் போன்று,

[1981 மார்ச் 23

நகராட்சிப் பள்ளிகளின் மேற்பார்வையாளர்கட்கு மோட்டார் சைக்கிள் வாங்கக் கடனும், பராமரிப்புச் செலவும் தர அரசு முன்வருமா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் தரப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (இ) இப்பொருள் பற்றி அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : நகராட்சிகளிலே கல்வி மேற்பார்வையாளர் களாகப் பணியாற்றுகிறவர்களுக்கு ஏனைய மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிற மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கான கடனும், அதற்கான பராமரிப்புச் செலவும் தரப்படாத காரணத்தாலே, அவர்கள் அடிக்கடி பள்ளி களுக்குச் சென்று பார்வையிடவோ, தூரப் பகுதிகளுக்குச் சென்று குறித்த நேரத்தில் பள்ளிகளைப் பார்வையிடவோ முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் சென்று வருவதற்கான செலவை ஈடு செய்ய முடியாத நிலைமையிலே தவறுகள் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஆசிரியர்களை டாக்ஸ் செய்யும் அளவிற்கு நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே—அரசு பரிசீலனை செய்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் —விரைந்து முடிவெடுத்து, அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நகராட்சிகளிலே கல்வி மேற்பார்வையாளர்கள், என்று நான்கு வகையாக இருக்கிறார்கள். 2-9-1980-லே ஜீ.ஓ. எம்.எஸ். நெம்பர் 1322 என்ற அரசாணை போடப் பட்டிருக்கிறது. அதிலே யார் யார் 600-க்கு மேல் சம்பளம் பெறுகிறார்களோ அவர்களுக்கெல்லாம்—முனிசிபல் கவுன்சில் அட் இட்ஸ் டிஸ்கிரீஷன்— தேவையானால் மோட்டார் சைக்கிள் வாங்க அவர்களுக்குப் பணம் ஒதுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே அவர்கள் பணம் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அமைச்சரவர்கள், 600-க்கு மேற்பட்டு ஊதியம் பெறுபவர்களுக்கு வழங்குவதாகச் சொல்லுகிறார்கள். கல்வி மேற்பார்வையாளர்கள், 600-க்கு மேற்பட்டு ஊதியம் பெறுவது போலவே, 600-க்குக் கீழேயும் ஊதியம் பெறுகிறார்கள். அவர்களும் அந்தப் பணியை ஆற்றுகிறார்கள். இந்தச் சலுகைகளைக் கடனாகத்தான் தருகிறார்கள். திரும்பிப் பெற்றுக்கொள்ளலாம். எனவே 600-க்குக் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகையைத் தர அரசு முன்வருமா ?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கொடுக்கப்படுவது 'கடன்' என்பதை கருத்திலே கொள்ள வேண்டும். ஏனென்றால் வாங்குகிற சம்பளம் அவர்களுடைய வறுமையைப் போக்கவே போதாது என்ற நிலை இருக்கு மென்று சொன்னால், கண்டிப்பாக அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைதான் ஏற்படும். திருப்பிச் செலுத்தும் நிலை இருப்பவர்களுக்கு மட்டுமே இது போன்ற கடன்கள் கொடுக்கப்பட வேண்டு மென்று அரசாணை போடப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதை மெயின்டெயின் பண்ண 10 ரூபாய் கொடுக்கப்படுகிறது. They can maintain cycles only.

(முற்பகல் 9-50)

திரு. செ. முத்துசாமி : 600 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குபவர்கள் மோட்டார் சைக்கிள் வாங்க தகுதி உடையவர்களாக இருப்பார்கள் என்றால், 600 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குபவர்கள் மொபட் வாங்க தகுதியுடைய வர்கள் என்கிற முறையில் ஆணையை வெளியிட்டு சலுகையை வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? சேலம், கோயம்புத்தூர் போன்ற பல முனிசிபாலிட்டிகளில் பல மைல் தூரத்திற்குச் சுற்றி வருகிற சூழ்நிலை அங்கு பணியாற்றுபவர்களுக்கு இருப்பதால், அது சரியாகப் படவில்லை. ஆகவே 600 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குபவர்கள் மொபட் வாங்கிக்கொள்ளலாம் என்கிற முறையில் அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சைக்கிள் ஓட்டுவது தேக ஆரோக் கியத்திற்கு மிகவும் நல்லது. அப்படி அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவும் இயந்திரத்தால் ஓடுவதுதான். எதுவும் இயந்திரத்தால் ஓடுகின்றவை கள் என்று சொல்லும்போது, மொபட்டுக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் வேறு பாடு இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மொபட் வாங்க அனுமதி வழங்காவிட்டால் சைக்கிளில் மோட்டர் பொருத்தியுள்ள சைக்கிள் வாங்கிக் கொள்ளலாம் என்கிற முறையில் அனுமதி தரப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதுவும் இயந்திர மயம் தான். காலை அழுத்திச் செலுத்துவது தான் சைக்கிள். பாக்கி மோட்டார் வைத்து ஓட்டுகின்றவைகள் எல்லாம் இயந்திரமயமானவை தான்.

THIRU A. R. DAMODARAN : Sir, since the Hon. Minister feels that cycles are very healthly to drive, may I know whether Ministers will give up their cars and come by cycles to the Secretariat ?

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எப்போது வேண்டுமானாலும் சைக்கிளில் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்துக்கொண்டால் அதிலே கூட வர நாங்கள் தயங்க மாட்டோம். (சிரிப்பு).

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 600 ரூபாய்க்குக் கீழே சம்பளம் பெறுகின்ற வர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்குரிய வசதி இல்லாத காரணத்தால், அவர்களுக்கு இந்த வசதியைத் தரவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பணத்தைப் பிடித்தம் செய்யும்போது அதற்கு ஏற்றாற்போல் தவணையை நீட்டிப்பதால், அவர்களும் சுலபமாகத் திருப்பித் தர முடியும். அதற்கேற்ப தவணையை நீட்டித்துத் தர இந்த அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்பொழுது இருக்கிற அரசாணை யில் உள்ள நிலையை நான் சொன்னேன். இனிமேல் இப்படிப்பட்ட அரசாணை வெளியிடப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்களைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

சென்னை, சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் பேருந்து விபத்து

*152 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஜூலை மாதம் 28 ஆம் நாள், பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தினுள் நுழைந்து மிகுந்த சேதத்தை ஏற்படுத்தியது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதனால் (i) புகைவண்டி நிலையத்துக்கும் (ii) பேருந்துக்கும் ஏற்பட்ட சேதம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) உண்மை.

(இ) (i) புகைவண்டி நிலையத்திற்கு ஏற்பட்ட சேதம்—ரூ. 10,000

(ii) பேருந்துக்கு ஏற்பட்ட சேதம்—ரூ. 7,644-84.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த விபத்தால் உயிர்ச் சேதம் ஏதாவது ஏற் பட்டதா ? யாருக்காவது காயம் ஏற்பட்டதா ? இந்த விபத்து ஏற்பட்ட காரணம் என்ன ? இத்தகைய நிலை வருங்காலத்தில் வாராமலிருக்கும் வகையில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?